இந்தியத் துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

***

ஊடக அறிக்கை

"ஆசாதி கா அம்ரித் மஹோற்சவ்" கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகமானது வட மாகாணத்தின் சுதேச மருத்துவத் திணைக்களத்துடன் இணைந்து "அனைத்துலக சுகாதார பாதுகாப்பு தினமான" 12 டிசம்பர் 2021 அன்று இலங்கையின் வட மாகாணம் முழுவதும் "அனைவருக்கும் சித்தா" எனும் விழிப்புணர்வு பரப்புரையை தொடங்கியது. இந்த பரப்புரை பல்வேறு நோய்களுக்கு மருத்துவ ஆலோசனை மற்றும் சித்த மருந்துகளை வழக்கமான சுகாதார பரிசோதனைகளுடன் இலவசமாக கிடைக்கச் செய்வதை நோக்காக கொண்டது.

2. பரப்புரையை தொடக்கி வைக்குமுகமாக, இன்று (12 டிசம்பர் 2021) யாழ்ப்பாணம், சங்கானை கலாச்சார மண்டபத்தில் சித்த மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மங்கள விளக்கேற்றல் நிகழ்வுடன் ஆரம்பமான நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ், செயலாளர், சுகாதாரம், சுதேச மருத்துவம் மற்றும் நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் அமைச்சு திரு.பி.செந்தில்நந்தனன், வடக்கு மாகாண சுதேச மருத்துவத் துறை ஆணையாளர் டாக்டர் (திருமதி) கே.ஜெபநாமகணேசன், துணை ஆணையாளர் திரு.த.நடனேந்திரன், , டாக்டர் சத்திய சீலன் வட மாகாண சுதேச வைத்தியத் திணைக்களம், தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை செந்தூரன், உதவி பிரதேச செயலாளர், சங்கானை, யாழ்ப்பாணம், சமூக மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் சித்த மருத்துவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

3. இந்த மருத்துவ முகாமானது எந்த முன் பதிவும் அவசியமல்லாத ஒரு திறந்த அணுகல் முகாமாக இருந்தமை அனைவர் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றது. அனைத்து வயதினரையும் சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட நோயாளிகள் மருத்துவமுகாமுக்கு வருகைதந்து தங்கள் நோய்களுக்கு இலவச மருத்துவ ஆலோசனைகளையும் மற்றும் இலவச சித்த மருந்துகளையும் பெற்று பயனடைந்தனர். சித்த மருத்துவ முறையானது பாரம்பரிய மருத்துவ முறைகள் மற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்து, வாழ்க்கை முறை மேலாண்மை, புத்துணர்ச்சி சிகிச்சை, முதியோர் பராமரிப்பு, தாய் மற்றும் குழந்தை பராமரிப்பு மற்றும் பிற நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்தும் நடவடிக்கைகளை வலியுறுத்துவதன் மூலம் அனைவருக்கும் முழுமையான சுகாதார மேலாண்மையை வழங்குகிறது. தற்போதைய கோவிட் தொற்றுநோய்களின் போது இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

4. நிகழ்வுகளின் புகைப்படங்கள் சில இணைக்கப்பட்டுள்ளன.

***

யாழ்ப்பாணம்
டிசம்பர் **12, 2021**